உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத் தடுப்புக்காவல் குறித்து டாக்டர் யாக்கூப்

# உணர்ச்சிவசப்படாமல் விவேகமாக, நிதானமாக, தீர்க்கமாக இருக்கவும்

'இளையர்களுக்கு இஸ்லாத்தைக் கற்றுக்கொடுக்கும் முறையையும் அவர்களுடன் தொடர்பை வளர்த்துக்கொள்ளும் முறையையும் நாம் மாற்றியமைக்க வேண்டும். நமது இளம் சமய ஆசிரியர்களில் சிலர் இளைய தலைமுறையினரின் தேவைகளை அறிந்து செயல் படுகின்றனர் என்பதே உண்மை.'

– முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் யாக்கூப்

இங்குள்ள முஸ்லிம்கள் தீவிரப்போக்கை வளர்த்துக் கொள்ளாமல் தடுக்க சிங்கப்பூரில் பயன்மிக்க நடைமுறை இருக்கிறது.

அது, முப்தி, சமய ஆசிரியர்கள் மற்றும் இஸ்லாமியச் சமய மன்றம் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

சரியான பாதையில் செல்வதற்கு ஆலோசனை பெற அல்லது தவறான பாதையில் வழிதவறிச் செல்வோரைப் பற்றி தகவல் தெரிவிக்க இம்மூன்றையும் முஸ்லிம்கள் நாடலாம் என்று முஸ்லிம் விவகார அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் கூறியிருக்கிறார்.

அண்மையில் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மூன்று முஸ்லிம்களுக்கு உத்தரவிடப் பட்டது குறித்து அவர் முதல்முறையாகக் கருத்துரைத்தார்.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் அண்மையில் முஸ்லிம் தேசிய சேவையாளர் ஒருவரைத் தடுப்புக்காவலில் வைத்ததோடு, மேலும் இரு முஸ்லிம்களுக்குக் கட்டுப்பாட்டு உத்தரவு விதித்தது.

இச்செய்தி செவ்வாய்க்கிழமை வெளிவந்ததைத் தொடர்ந்து, சிங்கப்பூர் முஸ்லிம் தலைவர்கள் அக்கறை தெரிவித்தனர்.

ஆனால் அவர்களும் மற்ற சமயங்களின் தலைவர்களும் பல சமய நல்லுறவுக்குத் தங்கள் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

கைது நடவடிக்கை குறித்து உணர்ச்சிவசப்படாமல் இருக்குமாறு டாக்டர் யாக்கூப் எச்சரிக்கை விடுத்தார்.

இதுபோன்ற சவால்களை எவ்வாறு கையாளுவது என்பதைச் சமயத் தலைவர்கள் வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

"ஒவ்வொரு சம்பவமும் கண்டிப்பாக புதிய சவால்களையும் புதிய பதில் நடவடிக்கைகளையும் எழுப்பும். இவற்றை நாம் தொடர்ந்து ஆராய்ந்து, சீர்செய்யவேண்டும்.

"உணர்ச்சிவசப்படாமல் இருப்பது முக்கியம். ஆனால், நாம் செயல்படாகவேண்டும். நாம் தீர்க்கமான, விவேகமான, நிதானமான முறையில் செயல்பட வேண்டும்.

"இத்தகைய சம்பவம் மீண்டும் நிகழாமல் நாம் உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் இதற்கு யாரேனும் உத்தரவாதம் தர முடியுமா? முடியுமென்று நான் நினைக்கவில்லை," என்றார் டாக்டர் யாக்கூப்.

அதிபர் சவால் அறப்பணிக்காகப் பள்ளிவாசலில் நடைபெற்ற நிதிதிரட்டு நிகழ்ச்சியில் டாக்டர் யாக்கூப் பேசினார்.

ஏமனில் உள்ள தீவிர சமயப் போதகர் அன்வர் அல்-அவ்லாகியுடன் தொடர்பிலிருந்த முழுநேர தேசிய சேவையாளர் முகம்மது ஃபேடில் அப்துல் ஹமீது, சான்று பெறாத சமய போதகர் முகம்மது அன்வர் ஜைலானி, தொழிலதிபர் முகம்மது தாஹிர் ஷேக் தாவுத் ஆகியோரை உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அண்மையில் விசாரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முகம்மது ஃபேடில் (20), பலதுறைத் தொழில்கல்லூரியில் படிக்கும்போது புனிதப்போர் கருத்துகளையும் வீடியோ படங்களையும் இணையத்தில் பார்த்து வந்தார். வெடிகுண்டு தயாரிக்க இணையத்தில் விவரங்களும் தேடினார்.

மேலும் தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தி, வீரத் தியாகத்தைப் போற்றும் வீடியோ படத்தையும் தயாரித்து இணையத்தில் வெளியிட்டார்.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட முகம்மது ஃபேடில், சுயமாகத் தீவிரப் போக்கை வளர்த்துக்கொண்ட ஆறாவது சிங்கப்பூரர் என்று உள்துறை அமைச்சு தெரிவித்தது.

முகம்மது அன்வருக்கும் முகம்மது தாஹிருக்கும் கட்டுப்பாட்டு உத்தரவு விடுக்கப்பட்டது.

இணையத்தின் அபாயத்தை இச்சம்பவம் மீண்டும் வெளிச்சத் திற்குக் கொண்டு வந்துள்ளது.

ஆனால், இணையத்தைக் கட்டுப்படுத்துவது சிரமம் என்றார் டாக்டர் யாக்கூப்.

இஸ்லாமிய சமய மன்றமும் முஸ்லிம் சமூகமும் இளையர் களுக்கு உகந்த திட்டங்களுடன் இளையர்களைக் கவர்வதே அவற்றால் செய்யக்கூடியது என்றார் அவர்.

முயிஸ் எனப்படும் இஸ்லாமிய சமய மன்றம் அதன் சமயக் கல்வித் திட்டத்தைச் சீரமைத்திருக்கிறது. இதற்குப் பங்கேற்பாளர்களிட மிருந்து நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது.

முயிஸ் அதன் நடைமுறையைத் தொடர்ந்து பரிசீலிக்கும் என்று டாக்டர் யாக்கூப் தெரிவித்தார்.

ஆனால், அங்கீகரிக்கப்பட்ட சமயப் பள்ளிகளின் விரிவான பட்டியலைத் தயாரித்து வழங்குவது நடைமுறைக்குப் பொருந்தாது என்று அவர் குறிப்பிட்டார்.

சமூகத்தின் மையங்களான முயிஸ், சமய ஆசிரியர் அங்கீகரிப்புத் திட்டம் போன்ற வற்றைப் பொதுமக்கள் பயன் படுத்துவதை உறுதிப்படுத்துவதே இலக்கு என்றார் அவர்.